# வெளியீட்டுரை

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் - என் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு - முற்கோலி
வந்திலரே னீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே.

இறைவனின் பெருமையை உணர்தற்கும், அவனின் புகழைப்போற்றிப் பாடுவதற்கும் பன்னிரு திருமுறைகள் பெரிதுந் துணை புரிகின்றன. திருமுறைகளைப் பண்ணோடு பாடுவது நெஞ்சு நெக்குருகச் செய்யும் பேரானந்தமாகும்.

ஞாயிறு தினங்களில் ஆலயங்கள் தோறும் அறநெறிப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. ஆலய நிர்வாக சபைகளினாலும், இந்து சமய நிறுவனங்களினாலும் நிர்வகிக்கப்படும் இப்பாடசாலைகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நிர்வகித்து வருகின்றது.

இளமையிலிருந்து சிறார்கள் ஒழுக்க கட்டுப்பாட்டுடன் சமய உணர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அறநெறிப் பாடசாலைகளின் பிரதான நோக்கமாகும். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக திணைக்களம், பாடத்திட்டம், துணை நூல்கள், வரவு இடாப்பு, சீருடைகள் என்பவற்றை இலவசமாக வழங்கி வருகின்றது. சிறப்பாக பண்ணிசை வகுப்புகளை நடத்தும் அறநெறிப்பாடசாலை களுக்கு சுருதிப்பெட்டி, தாளம் போன்றனவும் வழங்கப்படுகின்றன.

இலவச வெளியீட்டுத் தொடரின் முதல் நூலான முதற் பதிப்பு 1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் வேண்டுகோளுக்கிணங்க, இதன் நான்காவது பதிப்பு தற்போது வெளியிடப்படுகின்றது. இப்பதிப்பில் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய போற்றித் திருவகவலும் சேர்க்கப்பட்டுள்ளது.

திருமுறைகளைப் பிழையற மனனம் செய்து பண்ணுடன் இசைப்பாடிப் பயில இத்திரட்டு பெரிதும் துணை புரியும் என்பது எமது நம்பிக்கையாகும். இந்நூலைப் பெறுகின்ற ஆசிரியர்களும், மாணவர்களும் சிறந்த முறையில் பேணிப் போற்ற வேண்டும் எனவும் அவாவுகின்றேன்.

*'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'*

**சாந்தி நாவுக்கரசன்,**
பணிப்பாளர்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
248 1/1, காலி வீதி,
கொழும்பு 04.

3-CM 017411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாந் திருமுறை

## திருமந்திரம் - திருமூலர்

திருச்சிற்றம்பலம்

சிவனோ டொக்கும் தெய்வம் தேடினுமில்லை
அவனோ டொப்பா ரிங்கு யாவருமில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவளச் சடைமுடித் தாமரை யானே. 97

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரு மறிகிலார்
அன்பே சிவமாவது யாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 98

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் மணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே. 99

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. 100

சைவ சமயத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறிச் சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத் துளார்க்கு வகுத்து வைத்தானே. 101



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

